www.kalvikural.com

# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## இரண்டாம் நிலை ஆண் சிறைக் காவலர்கள் தேர்வு - 2007

**வினாத்தாள் வரிசை** **A** **பதிவு எண்:**

தேர்வு நாள் : 4.5.2008

நேரம் : 80 நிமிடங்கள் மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரைகள்**

1. இவ்வினாத்தாளில் பகுதி 'அ' பொது அறிவு சம்பந்தப்பட்டது. அதில் 50 வினாக்கள் உள்ளன. பகுதி 'ஆ' உளவியல் சம்பந்தப்பட்டது. அதில் 30 வினாக்கள் உள்ளன.
2. வரிசை எண் 1 முதல் 50 வரை பகுதி–அ வில் உள்ள பொது அறிவு வினாக்களையும் வரிசை எண் 51 முதல் 80 வரை பகுதி –ஆ வில் உள்ள உளவியல் வினாக்களையும் குறிக்கும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள இந்த வினாத்தாளின் வரிசையை, விடைத்தாளில் அதற்குரிய இடத்தில் பட்டை தீட்டவும். வினாத்தாளின் வரிசையை பட்டைத் தீட்டாவிட்டால், அந்த விடைத்தாள் மதிப்பிட மாட்டாது.
4. 80 கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு மதிப்பெண்.
6. நீலம் (அ) கருப்பு நிற பால் பாயிண்ட் பேனாவை கொண்டு பதிவு எண்ணை அதற்குரிய கட்டத்தில் நிரப்பவும்.
7. பதிவு எண் மற்றும் விடைகளை நீலம் (அ) கருப்பு நிற பால் பாயிண்ட் பேனாவை கொண்டு அந்தந்த வட்டங்களில் பட்டை தீட்டவும்.
8. ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே தேர்ந்தெடுத்து பட்டை தீட்டவும்.
9. தவறாக பட்டை தீட்டுவதையும் அடித்தல் திருத்தங்கள் செய்வதையும் தவிர்க்கவும். பதிவு எண்ணையும், விடைகளையும் கவனமாக பட்டை தீட்டவும். பதிவு எண்ணையும், விடைகளையும் சரியாக பட்டை தீட்டப்படாத விடைத்தாள் மதிப்பிடப்பட மாட்டாது.
10. பதிவு எண்ணை, கேள்வித்தாளில் அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.

## பகுதி அ : பொது அறிவு

**1. மனிதர்களில் மச்சம் உண்டாதல் எந்த திடீர் மாற்றத்திற்கு உதாரணம்?**

A) குரோமோசோம்களின் திடீர் மாற்றம்
B) ஜீன் திடீர் மாற்றம்
C) பொருளறியா திடீர் மாற்றம்
D) உடல் திடீர் மாற்றம்

**2. தொழிற்சாலைகளில் புரதங்களை உற்பத்தி செய்வதற்கு பெருமளவில் பயன்படும் நுண்ணுயிரி**

A) பேசிலஸ் சப்டிலிஸ் B) எ.கோலை
C) சக்கரோ மைசெஸ் D) பாக்டீரியா பேஜ்

**3. ரைனோ வைரஸ்களினால் ஏற்படும் நோய்**

A) எய்ட்ஸ் B) தடுமன்
C) டைஃபாய்டு D) மலேரியா

**4. கனி பழுத்தல் செயலுக்கு காரணமான பைட்டோ ஹார்மோன்**

A) எத்திலீன் B) ஆக்ஸீன்
C) ஜிப்ரலீன் D) சைட்டோகைனின்

**5. உட்கரு அற்ற இரத்த செல் வகை எது?**

A) வெள்ளையணு B) தட்டையணு
C) பிளாஸ்மா D) சிவப்பணு

**6. உலக வெப்பமாதலை ஏற்படுத்துவது**

A) காரீயம் B) கார்பன் மோனாக்ஸைடு
C) கார்பன் டை ஆக்ஸைடு
D) நைட்ரஜன் ஆக்ஸைடுகள்

**7. வேம்பிலிருந்து கிடைக்கும் பூச்சிக்கொல்லி**

A) மானாஸைட் B) பைரித்திரின்
C) அஸாட்ரிக்டின் D) எரித்திரின்

www.kalvikural.com

8. நெல் தாவரம் எந்தக் குடும்பத்தை சார்ந்தது?
A) பேபேஸி B) போயேஸி
C) மியூஸேஸி D) ஆஸ்டரேஸி

9. கேழ்வரகு எந்த மண்ணில் செழித்து வளரும்?
A) வண்டல் மண் B) மணல்
C) செம்மண்
D) செம்மண் கலந்த வண்டல்

10. மண்புழு வளர்ப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) செரிகல்ட்சர் B) வெர்மிகல்ட்சர்
C) எபிகல்ட்சர் D) அக்குவாகல்ட்சர்

11. 5 மாணவர்களின் மதிப்பெண்கள் 75, 82, 90, 40, 100 எனில், வீச்சு யாது?
A) 50 B) 40
C) 60 D) 90

12. மூன்று நாணயங்கள் சுண்டுதலில் இரு தலைகள் கிடைக்க நிகழ்தகவு என்ன?
A) $\frac{3}{8}$ B) $\frac{1}{2}$
C) $\frac{2}{3}$ D) $\frac{1}{4}$

13. இரு நேர்கோடுகள் ஒன்றுக்கொன்று இணையாக இருப்பின் அதன் சாய்வுகள்
A) சமம் B) சமமற்றவை
C) பூஜ்ஜியம் D) சாய்வு கோணம்

14. ஒரு கூட்டுத்தொடரில் அமைந்த 4 எண்களின் கூடுதல் 50. அதில் உள்ள மிகப்பெரிய எண், மிகச்சிறிய எண்ணைவிட நான்கு மடங்கு பெரியது எனில், அத்தொடரின் முதல் எண் யாது?
A) 6 B) 5
C) 10 D) 8

15. ஒரு செவ்வகத்தின் சுற்றளவு 36 செ.மீ. அதன் பரப்பளவு 80 ச.செ.மீ. எனில் அதன் அகலம் எவ்வளவு?
A) 6 செ.மீ. B) 10 செ.மீ.
C) 4 செ.மீ. D) 8 செ.மீ.

16. கோள்களின் இயக்கம் பற்றிய கெப்ளரின் முதல் விதியின் மற்றொரு பெயர்
A) காலங்களின் விதி
B) பரப்புகளின் விதி
C) சுற்றுபாதைகளின் விதி
D) தொலைவுகளின் விதி

17. வெப்பநிலைமானியில் பாதரசம் பயன்படுத்தப்படுவதன் காரணம்
A) பாதரசத்தின் அடர்த்தி அதிகம்
B) குளிர்விப்பானாக பாதரசம் பயன்படுவதால்
C) பாதரசத்தின் தன் வெப்ப ஏற்புத்திறன் மிகவும் குறைவு
D) பாதரசத்தின் தன்வெப்ப ஏற்புத் திறன் அதிகம்

18. இருபுற குவி கண்ணாடி லென்சை உருவாக்கியவர்
A) ஸ்நெல்
B) கலிலியோ
C) பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்
D) நியூட்டன்

19. வெப்பமூட்டும் கருவிகளில் பயன்படும் மின்னிழை எது?
A) நிக்ரோம் B) தாமிரம்
C) இரும்பு D) அலுமினியம்

20. புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படும் ரேடியோ ஐசோடோப்பு எது?
A) ரேடியோ அயோடின்
B) ரேடியோ கோபால்ட்
C) ரேடியோ சோடியம்
D) ரேடியோ கதிரியக்க இரும்பு

21. தேனீரில் உள்ள அமிலம்
A) சிட்ரிக் அமிலம் B) லாக்டிக் அமிலம்
C) டானிக் அமிலம் D) டார்டாரிக் அமிலம்

22. கண்ணாடியை அரிக்கும் தன்மை கொண்ட அமிலம்
A) ஹைட்ரோ குளோரிக் அமிலம்
B) டார்டாரிக் அமிலம்
C) நைட்ரிக் அமிலம்
D) ஹைட்ரோ ஃபுளூரிக் அமிலம்

23. கீழ்கண்ட தாதுக்களில் அலுமினியம் உற்பத்திக்குப் பயன்படாதது
A) பாக்சைட் B) கோரண்டம்
C) மேக்னடைட் D) கிரையோலைட்

24. காப்பர் மற்றும் ஜிங்க் கலந்து தயாரிக்கப்படும் உலோகக் கலவை
A) பித்தளை B) டியரலுமின்
C) வெண்கலம் D) மாக்னோலியம்

25. அசிட்டோன் கொண்டு தயாரிக்கப்படுவது
A) கண்ணாடி B) சிமெண்ட்
C) இரப்பர் D) சோப்பு

26. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று கூறியவர்
A) திலகர் B) கோகலே
C) வ.உ. சிதம்பரனார் D) பாரதியார்

27. இந்திய பெரும்புரட்சியின்போது கான்பூரில் புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்
A) நானா சாகிப்
B) மங்கள் பாண்டே
C) இராணி இலட்சுமிபாய்
D) பாஜிராவ்

28. இராஜா ராம்மோகன் ராய் தோற்றுவித்தது
A) ஆரிய சமாஜம்
B) பிரம்ம சமாஜம்
C) பிரம்ம ஞான சபை
D) சுத்தி இயக்கம்

www.kalvikural.com

**29. இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பான் நாட்டின் மீது அணுகுண்டு வீசிய நாடு எது?**
A) ஜெர்மனி B) அமெரிக்கா
C) இங்கிலாந்து D) ரஷ்யா

**30. இந்தோனேஷியா நாட்டை அடிமைப்படுத்திய நாடு எது?**
A) பெல்ஜியம் B) பிரான்ஸ்
C) இங்கிலாந்து D) ஹாலந்து

**31. மிகவும் பழமையான மடிப்பு மலைகள் எனப்படுவது**
A) மேற்கு தொடர்ச்சி மலைகள்
B) கிழக்கு தொடர்ச்சி மலைகள்
C) இமய மலைகள்
D) சாத்பூரா மலைகள்

**32. தீபகற்ப இந்தியாவில் மிக நீளமான ஆறு**
A) காவிரி B) கோதாவரி
C) கிருஷ்ணா D) மகாநதி

**33. சணல் எந்த மாநிலத்தில் அதிகம் பயிராகிறது?**
A) பீகார்
B) மத்திய பிரதேசம்
C) ஒரிஸா
D) மேற்கு வங்காளம்

**34. பாக்ஸைட் தாது மிகுதியாக உற்பத்தி செய்யும் மாநிலம்**
A) ஆந்திரப்பிரதேசம் B) பீகார்
C) பஞ்சாப் D) தமிழ்நாடு

**35. இந்தியாவில் முதன்முதலாக தொடங்கப்பட்ட ரயில் பாதை**
A) மும்பை – புனே
B) மும்பை – தானே
C) மும்பை – டில்லி
D) மும்பை – கோவா

**36. மாநில முதலமைச்சரை நியமிப்பவர் யார்?**
A) பிரதம அமைச்சர்
B) குடியரசு தலைவர்
C) சட்டபேரவை தலைவர்
D) மாநில ஆளுநர்

**37. தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை**
A) 260 B) 300
C) 244 D) 234

**38. சிட்டிசன் எனும் சொல் எம்மொழியிலிருந்து பெறப்பட்டது?**
A) கிரேக்கம் B) இலத்தீன்
C) ஸ்பானியம் D) பிரெஞ்சு

**39. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு கால வயது**
A) 62 B) 65
C) 58 D) 60

**40. குடிமக்கள் பொதுவாக எவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றனர்?**
A) இருவகையாக
B) ஒரே வகையாக
C) மூன்று வகையாக
D) நான்கு வகையாக

**41. கீழ்க்கண்டவர்களில் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்றவர் யார்?**
A) விஸ்வநாதன் ஆனந்த்
B) சானியா மிர்சா
C) லியாண்டர் பயஸ்
D) சச்சின் டெண்டுல்கர்

**42. கீழ்க்கண்டவர்களில் யார் சதுரங்க வீரர் இல்லை?**
A) ஹரிகிருஷ்ணா B) ஹம்பி
C) மகேஷ் பூபதி D) சசிதரன்

**43. 2008 –இல் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவிருக்கும் நகரம்**
A) பாரிஸ் B) இலண்டன்
C) பெர்லின் D) பீஜிங்

**44. தாலிபன் தீவிரவாதிகள் சார்ந்த நாடு**
A) ஆப்கானிஸ்தான் B) இந்தியா
C) பாகிஸ்தான் D) ஈராக்

**45. கீழ்க்கண்டவற்றுள் எந்த நாடு ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை?**
A) கென்யா
B) ஜிம்பாப்வே
C) நைஜீரியா
D) துருக்கி

**46. மார்டின் லூதர் கிங் (Jr) சார்ந்த நாடு எது?**
A) அமெரிக்கா B) இங்கிலாந்து
C) இத்தாலி D) ஜெர்மனி

**47. ஃபிடல் கேஸ்ட்ரோ என்பவர் யார்?**
A) குத்துச்சண்டை வீரர்
B) விண்வெளி வீரர்
C) முன்னாள் கியூபா அதிபர்
D) கால்பந்து வீரர்

**48. காந்தியடிகள் பிறந்த வருடம்**
A) 1889 B) 1869
C) 1875 D) 1867

**49. “அன்னை (The Mother)” என்ற நூலை இயற்றியவர் யார்?**
A) லியோ டால்ஸ்டாய்
B) இரவீந்திரநாத் தாகூர்
C) சார்லஸ் டிக்கன்ஸ்
D) மாக்ஸிம் கார்க்கி

**50. யாக் (Yak) என்பது ஒரு வகை**
A) எருமை B) மான்
C) மீன் D) பறவை

www.kalvikural.com

# பகுதி ஆ : உளவியல்

***அடுத்து வரும் 5 வினாக்களில் ஒவ்வொரு வாக்கியம் தரப்பட்டுள்ளது. அதை பயன்படுத்தி அதன் கீழே உள்ள நான்கு முடிவுகளில் எது சரியாக பொருந்தும் என காண்க.***

51. **“அந்த கடையில் உள்ள பெரும்பான்மையான துணிகள் விலை உயர்ந்தவை”**
    - A) அந்த கடையில் மலிவான துணிகள் இல்லை
    - B) கைத்தறி துணிகள் அந்த கடையில் மலிவாக கிடைக்கும்.
    - C) அந்த கடையில் மலிவான துணிகளும் கிடைக்கும்.
    - D) அந்த கடையில் சில துணிகள் விலை உயர்ந்தவை.

52. **“இந்த நூல் பயனுள்ளதாக இருக்கும் ஏனெனில், எல்லா நல்ல நூல்களும் பயனுள்ளதாக இருக்கும்.”**
    - A) இது நல்ல நூல் இல்லை
    - B) இது நல்ல நூல்
    - C) எந்த நூலும் சோத்துக்கு உதவாது
    - D) சில நல்ல நூல்கள் உதவும்

53. **“என் வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் புத்திசாலிகள். முருகன் புத்திசாலி இல்லை.”**
    - A) சில மாணவர்கள் அறிவாளிகள்
    - B) முருகன் கடினமாக உழைக்க வேண்டும்
    - C) புத்திசாலிகளாக இல்லாதவர்கள் மாணவர்கள் இல்லை
    - D) முருகன் என் வகுப்பில் இல்லை

54. **“திறமைதான் ஏழையின் சொத்து”**
    - A) ஏழை எப்போதும் திறமையுடன் இருக்க வேண்டும்
    - B) ஏழைக்கு செல்வம் சேர்க்கும் திறமை உள்ளது.
    - C) செல்வம் இருப்பவனிடம் திறமை இருக்கிறது
    - D) ஏழை திறமையிருந்தால் செல்வம் சேர்க்கலாம்

55. **“இராணுவ வீரர்கள் நாட்டிற்கு தொண்டு செய்கின்றனர்.”**
    - A) ஆண்கள் பொதுவாக நாட்டிற்கு தொண்டாற்றுவார்கள்
    - B) நாட்டிற்கு தொண்டாற்றுபவர் அனைவரும் இராணுவ வீரர்கள்
    - C) இராணுவ வீரர்களாக இருக்கும் சிலர் நாட்டிற்கு தொண்டு செய்கின்றனர்.
    - D) பெண்கள் இராணுவத்தில் இல்லை.

56. **“வாழ்க்கையில் வெற்றிபெறும் இரகசியம்”**
    - A) நிறைய பணம் இருத்தல்
    - B) நேர்மையும் கடமை உணர்வும் இருத்தல்
    - C) தொடர்ந்து கடினமாக உழைத்தல்
    - D) உயர்ந்த மனிதர்களோடு தொடர்பு இருத்தல்

57. **ஒருவன் உன்னுடைய நெருங்கிய நண்பனாக இருக்கவேண்டுமென்றால் அவன்**
    - A) உனக்கு பணம் தேவைப்படும்போது உதவ வேண்டும்
    - B) உனக்கு ஒரு ஆபத்து வரும்போது உதவ வேண்டும்
    - C) உன்னோடு எப்போதும் உடன் இருக்க வேண்டும்
    - D) உன்னை பாராட்டுகிறவனாக இருக்க வேண்டும்

58. **ஒருவன் ஏழைகளுக்கு உதவ நினைக்கிறான், ஏனெனில் ஏழைக்கு உதவினால்**
    - A) புகழ் பெறலாம்
    - B) மன நிறைவு பெறலாம்
    - C) மக்களிடையே செல்வாக்குப் பெறலாம்
    - D) ஏழைகள் பாராட்டுவார்கள்

59. **இளைஞர்கள் படித்த பெண்களை திருமணம் செய்ய விரும்பும் காரணம், படித்த பெண்கள்**
    - A) அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பர்
    - B) கணவனுக்கு பண நெருக்கடி வரும்போது தானும் வேலை செய்து உதவலாம்
    - C) வீட்டு வேலைகளை அதிக திறமையாக கவனிப்பார்கள்
    - D) பொதுவாக மிகவும் அழகாக இருப்பார்கள்

60. **காவல் துறையினர் சீருடை அணிய காரணம்**
    - A) சீருடையை கண்டு திருடர்கள் அஞ்சுவார்கள்
    - B) அரசு ஆணையிட்டதால்
    - C) சீருடையில் கம்பீரமாக தோற்றம் அளிப்பதால்
    - D) சீருடையில் அவர்களை மக்கள் சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்க முடிவதால்

***அடுத்து வரும் 5 வினாக்களும் கீழ்வரும் பத்தியை தழுவி உள்ளது.***

***“Z, Y, X, W, V என்ற 5 நபர்கள் ஒரு மேசையை சுற்றி அமர்ந்து உள்ளனர். இதில் ஒருவர் மருத்துவர், ஒருவர் ஆசிரியர், இன்னொருவர் பொறியாளர். பொறியாளர், ஆசிரியருக்கும் Y க்கும் நடுவே அமர்ந்துள்ளார். Y ஆசிரியரின் மனைவி. Z என்பவர் மருத்துவர். V என்பவர் அவரது மனைவி. V, Y யின் சகோதரி. ஆசிரியர் X க்கு வலது புறமாகவும், மருத்துவருக்கு இடது புறமாகவும் அமர்ந்துள்ளார். இவர்களுள் இரண்டு பெண்கள் எந்த பணியிலும் இல்லை.”***

61. **மனைவியோடு சேர்ந்து அமராத மனிதர் யார்?**

| | |
|---|---|
| A) Y | B) X |
| C) Z | D) W |

62. **Z க்கு வலது புறமாக யார் அமர்ந்துள்ளார்?**

| | |
|---|---|
| A) X ன் மனைவி | B) Z ன் மனைவி |
| C) Y | D) Y ன் மனைவி |

www.kalvikural.com

**63. Y க்கு Z என்ன உறவு?**

A) நண்பர்
B) மாமா
C) சகோதரியின் கணவர்
D) மனைவியின் சகோதரன்

**64. இதில் ஆசிரியர் யார்?**

A) Y B) W
C) V D) X

**65. இதில் திருமணம் ஆகாதவர் யார்?**

A) ஆசிரியர்
B) பொறியாளர்
C) மருத்துவர்
D) இவர்களுள் யாருமில்லை

**66. இரயிலில் பயணம் செய்யும்போது, ஒரு பயணி தவறி கீழே விழுவதை பார்த்த நீங்கள்**

A) உடனே அபாய சங்கிலியை இழுத்து இரயிலை நிறுத்த முயல்வீர்
B) கீழே விழுந்த நபரை நோக்கி குரல் கொடுத்து எழுந்து மீண்டும் இரயிலில் ஏறுமாறு கத்துவீர்
C) உடனே இரயிலில் இருந்து குதித்து, அவரை காப்பாற்ற முயல்வீர்.
D) இரயில் அடுத்த நிறுத்தம் வரும் வரை காத்திருந்து அங்குள்ள அதிகாரியிடம் தகவல் கொடுப்பீர்.

**67. நீங்கள் தனியாக வீட்டில் இருக்கும் போது, உங்கள் திருமணமான தங்கை திடீர் பிரசவ வலியால் துடிக்கிறார். நீங்கள்**

A) பதறிப்போய் செய்வதறியாது திகைப்பீர்
B) வீட்டிற்கு வெளியே ஓடிச்சென்று ஒரு மருத்துவரை அழைத்து வருவீர்.
C) அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வீர்
D) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆம்புலன்ஸ் வண்டியை வரவழைப்பீர்

**68. நீங்கள் விரும்பும் பெண்ணை மணக்க உங்கள் பெற்றோர் சம்மதிக்கவில்லை. நீங்கள்**

A) பெற்றோர் சொல்படி நடப்பீர்
B) ஒரே குழப்பத்தில் இருப்பீர்
C) பெற்றோருக்கு எதிராக உடன் அந்த பெண்ணை மணந்து கொள்வீர்.
D) பெற்றோரை சம்மதிக்க வைக்க மேலும் முயற்சி செய்வீர்.

**69. உன் நண்பன் உன்னிடம் பணம் கேட்டால், நீர்**

A) கொடுக்க மாட்டீர்
B) எதற்கு தேவை எனத் தெரிந்த பிறகு முடிவு செய்வீர்
C) எதற்கு என கேட்காமல் உதவி செய்வாய்
D) கடன் கேட்பது, கொடுப்பது பிடிக்காததால், நட்பை முறித்துக்கொள்வீர்.

**70. நீங்கள் செல்லும் பேருந்தில் ஒரு பணப்பை கீழே கிடக்கிறது. நீர்**

A) அதை எடுத்து வழியில் உள்ள ஒரு ஏழைக்கு கொடுத்துவிடுவீர்
B) பயணச்சீட்டு வழங்குபவரிடம் கொடுத்துவிடுவீர்
C) அதை கண்டுகொள்ளாமல் அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிடுவீர்
D) அதை திறந்து, அதில் முகவரி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து, தொலைத்தவருக்கு தகவல் சொல்வீர்

**71. ஒரு சங்கேத மொழியில் / # ? @ ௭ * எனில் GRAPES என்றும் [ # ? + / ௭ எனில் ORANGE என்றும் உள்ளது. SPOON என்பதை எது குறிக்கும்?**

A) * @ [ [ + B) * @ [ ] +
C) * @ ( [ ௭ D) + * @ @ ௭

**72. மேற்குறிப்பிட்ட அதே சங்கேத மொழியின் படி ௭ ? / / ௭ # எதை குறிக்கும்?**

A) GARAGE B) ERGGAE
C) EAGGER D) RANGER

**73. 100 – X = Y என்றால், எது சரி?**

A) X = Y B) X > Y
C) Y > X D) $\frac{X+Y}{100} = 1$

**74. ஒரு முக்கோணத்தின் இரு கோணங்கள் 60 டிகிரி மற்றும் 75 டிகிரி எனில், அதன் மூன்றாவது கோணம் என்ன?**

A) 45 டிகிரி B) 55 டிகிரி
C) 65 டிகிரி D) 35 டிகிரி

**75. கீழ்க்கண்ட எண்களில் மிகச்சிறியது எது?**

A) $\frac{7}{8}$ B) $\frac{15}{16}$
C) $\frac{11}{12}$ D) $\frac{23}{24}$

**76. ஒரு பேனாவை ரூ.220க்கு விற்றதில் 10% இலாபம் கிடைத்தது. அதனை வாங்கிய விலை**

A) ரூ.200 B) ரூ.190
C) ரூ.210 D) ரூ.240

**77. திருடன் ஒருவன் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் தப்பி ஓடுகிறான். 100 மீ பின்னிருந்து துரத்தும் காவலர் மணிக்கு 10 கி.மீ வேகத்தில் ஓடினால், எவ்வளவு நேரத்தில் திருடனை பிடிக்கலாம்?**

A) 2 நிமிடம் B) 3 நிமிடம்
C) 6 நிமிடம் D) 10 நிமிடம்

**78. கண்ணன் பிறந்தது 29–02–1960. இன்றுவரை அவன் எத்தனை பிறந்தநாள் கொண்டாடியிருப்பான்?**

A) 48 B) 12
C) 13 D) 24

**79. ஒருவன் ஒரு இடத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 கி.மீ. செல்கிறான். பிறகு இடதுபுறம் திரும்பி மேலும் 3 கி.மீ. செல்கிறான் மீண்டும் இடதுபுறம் திரும்பி மேலும் 3 கி.மீ செல்கிறான். அவன் தொடங்கிய இடத்திலிருந்து தற்போது எந்த திசையில் உள்ளான்?**

A) வடக்கு B) கிழக்கு
C) மேற்கு D) தெற்கு

**80. பாபு மற்றும் கோபு ஒரே இடத்திலிருந்து கிளம்புகின்றனர். பாபு வடக்கு நோக்கி 3 கி.மீ. சென்று, பிறகு வலதுபுறம் திரும்பி மேலும் 4 கி.மீ. செல்கிறான். கோபு மேற்கு நோக்கி 5 கி.மீ. சென்று, பிறகு வலதுபுறம் திரும்பி மேலும் 3 கி.மீ செல்கிறான். தற்போது அவர்களுக்குள் உள்ள இடைவெளி என்ன?**

A) 8 கி.மீ. B) 9 கி.மீ.
C) 1 கி.மீ. D) 15 கி.மீ.

www.kalvikural.com

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1.** (D) | **2.** (A) | **3.** (B) | **4.** (A) | **5.** (D) | **6.** (C) | **7.** (C) | **8.** (B) | **9.** (D) | **10.** (B) |
| **11.** (C) | **12.** (A) | **13.** (A) | **14.** (B) | **15.** (D) | **16.** (C) | **17.** (C) | **18.** (C) | **19.** (A) | **20.** (B) |
| **21.** (C) | **22.** (D) | **23.** (C) | **24.** (A) | **25.** (C) | **26.** (A) | **27.** (A) | **28.** (B) | **29.** (B) | **30.** (D) |
| **31.** (D) | **32.** (B) | **33.** (D) | **34.** (D) | **35.** (B) | **36.** (D) | **37.** (D) | **38.** (B) | **39.** (A) | **40.** (A) |
| **41.** (C) | **42.** (C) | **43.** (D) | **44.** (A) | **45.** (D) | **46.** (A) | **47.** (C) | **48.** (B) | **49.** (D) | **50.** (A) |
| **51.** (C) | **52.** (B) | **53.** (D) | **54.** (D) | **55.** (C) | **56.** (C) | **57.** (B) | **58.** (B) | **59.** (B) | **60.** (D) |
| **61.** (D) | **62.** (B) | **63.** (C) | **64.** (B) | **65.** (B) | **66.** (A) | **67.** (C) | **68.** (D) | **69.** (B) | **70.** (D) |
| **71.** (A) | **72.** (C) | **73.** (D) | **74.** (A) | **75.** (A) | **76.** (A) | **77.** (B) | **78.** (B) | **79.** (A) | **80.** (B) |

## விளக்கமான விடைகள்

**11. (C)**

வீச்சு = உச்ச மதிப்பு – குறைந்த மதிப்பு

100 – 40 = **60**

**12. (A)**

{(H1, H2, H3), (H1, H2, T3), (H1, H3, T2), (H2, H3, T1), (H2, T1, T3), (H1, T2, T3), (H3, T1, T2), (T1, T2, T3)}

இரண்டு தலைகள் கிடைக்க நிகழ்தகவு =

{(H1, H2, T3), (H1, H3, T2), (H2, H3, T1)}

= 3

= 3/8

**13. (A)**

இரு நேர்க்கோடுகள் ஒன்றுக்கொன்று இணையாக இருப்பின் அதன் சாய்வுகள் சமம் (as per rule)

**14. (B)**

ஒரு கூட்டுத்தொடரின் எண்கள் a, a+d, a+2d, a+3d என்க.

அவைகளின் கூடுதல் =

$a + a+d + a+2d + a+3d = 50$

$4a + 6d = 50$

$2a + 3d = 25$........................(i)

பெரிய எண் : சிறிய எண் = 4 : 1

$4a = a + 3d$

$4a – a = 3d$

$3a = 3d$

$a = d$ ..................................(ii)

சமன்பாடு (ii) ஐ (i) ல் பிரதியிட

$2a + 3d = 25$

$2d + 3d = 25$ ($\therefore a = d$)

$5d = 25$

$d = 25/5 = \mathbf{5}$

**15. (C)**

செவ்வகத்தின் சுற்றளவு = 2(l+b) = 36 செ.மீ.

செவ்வகத்தின் பரப்பளவு = lb = 80 செ.மீ.$^2$

$2(l+b) = 36$

$l+b = 18$

$l = 18 – b$ ........................(i)

$lb = 80$ ...........................(ii)

சமன்பாடு (i) ஐ (ii) ல் பிரதியிட

$(18 – b)\,b = 80$

$18b – b^2 = 80$

www.kalvikural.com

$0 = 80 + b^2 - 18b$

$b^2 - 18b + 80 = 0$

$(b - 10)(b - 8) = 0$

$b = 10$ or $8$

$l = 10, b = 8$

அகலம் = **8 செ.மீ.**

**76. (A)**

பேனாவை விற்ற விலை = ரூ.220

லாபம் = 10%

விற்ற விலை = 100% + 10% = 110%

வாங்கிய விலை = 100/110 × 220 = **ரூ. 200**

**77. (B)**

காவலரின் வேகம் = 10 கி.மீ.

= 5/18 × 10 = 25/9 மீ/செ.

திருடனின் வேகம் = 8 கி.மீ.

= 5/18 × 8 = 20/9 மீ/செ.

வித்தியாசம் = $\frac{25}{9} - \frac{20}{9} = \frac{5}{9}$ மீ/செ

திருடனைப் பிடிக்க ஆகும் நேரம் = $\frac{100 \text{ மீ}}{5/9}$

= 100 × 9/5 = 180 செகண்டுகள்

திருடனைப் பிடிக்க ஆகும் நேரம் = **3 நிமிடம்.**

**78. (A)**

கண்ணன் பிறந்த தேதி = 29.02.1960

இப்போது வருடம் = 2008

கண்ணன் கொண்டாடிய

பிறந்தநாட்களின் எண்ணிக்கை = 48/4 = 12

(லீப் வருடங்களில் மட்டுமே பிறந்தநாள் கொண்டாடி இருப்பான்)

**79. (A)**




**அவன் புறப்பட்ட இடத்திலிருந்து தற்போது வடக்கு திசையில் உள்ளான்.**

**80. (A)**




இருவருக்கும் உள்ள இடைவெளி = 5 + 4 = **9 கி.மீ.**

☼ ☼ ☼